**<u>அசல் வழக்கு எண்: 61/2022</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 12th day of August 2025
வா.சா.1. எலத்திரியான், த/பெ. எத்திராஜ்,

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி எல்லம்மாள் எனது பெயரியம்மா ஆகும். அவர் என் தந்தையின் முதல் மனைவி ஆவார். 2ம் பிரதிவாதி எல்லம்மாள் மகள் என்றால் சரிதான். எல்லம்மாளுக்கு சம்பத் என்ற மகன் பிறந்து அவர் 23 வயதில் இறந்துவிட்டார் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. பிறர் சொல்லி கேள்விபட்டிருக்கிறேன். எனது தந்தை 2016ம் வருடம் காலமானார். எனது தந்தைக்கு 2ம் பிரதிவாதியும் வாரிசு என்றால் சரிதான். சம்பத் இறந்த பிறகு எனது பெரியம்மா உயிருடன் இருந்த போதே எனது தந்தை எனது தாயார் உண்ணாமலையை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எல்லம்மாள் உயிருடன் இருந்த போது எனது தந்தை எனது தாயார் உண்ணாமலையை திருமணம் செய்ததால் அது சட்டப்படி செல்லாது என்றும் எனது தாயார் எனது தந்தைக்கு சட்ட பூர்வமான மனைவி என்றால் எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணையின் போது 1ம் பிரதிவாதி எல்லம்மாள் இறந்த விவரம் நீதிமன்றத்திற்கு தெரிய வந்த நிலையில் மேற்கண்ட இறப்பு சம்மந்தமாக பிராதில் திருத்தம் செய்ய வாதி வழக்கறிஞர் அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |